AGRICULTURAL CO-OPERATIVE STAFF TRAINING INSTITUTE

Sponsored by : The Tamil Nadu State Apex Co-operative Bank Ltd

Assisted under Co-operative Development Fund of NABARD

Accredited by Centre for Professional Excellence in Co-operatives, C-PEC BIRD -LUCKNOW

ATTITUDE
SKILL
KNOWLEDGE




# ACSTI

Post Box No.5 MADHAVARAM MILK COLONY,CHENNAI-600 051
Phone:044-2555 7737
E-mail : acsti.tnsc@gmail.com
Web: www.acstitnsc.in

# AGRICULTURAL COOPERATIVE STAFF TRAINING INSTITUTE MADHAVARAM, CHENNAI

## TRAINING PROGRAMME ON

## “KYC, PMLA & FINANCIAL INCLUSION FOR PACCS

# TABLE OF CONTENT


| Sl.No. | Topic | Page No. |
|---|---|---|
| 1 | உங்கள் வாடிக்கையாளரை அறிக (KNOW YOUR CUSTOMER) | 1 |
| 2 | E-KYC | 42 |
| 3 | C-KYC | 43 |
| 4 | PREVENTION OF MONEY LAUNDERING ACT | 46 |
| 5 | FINANCIAL INCLUSION | 48 |

# உங்கள் வாடிக்கையாளரை அறிக
# (KNOW YOUR CUSTOMER)

வங்கியின் வாடிக்கையாளர்களே, வங்கியின் அடித்தளம், புதிய வாடிக்கையாளர்களை வங்கிக்குள் அனுமதிக்கும் போது, குற்றப் பின்னணி உள்ள வாடிக்கை யாளர்களைத் தவிர்ப்பதும் நல்லவாடிக்கையாளர்களை சேர்த்துக் கொள்வதும்தான் வங்கியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மிக முக்கியமானவழிமுறை. இதற்காக வடிவமைக்கப்பட்டதுதான் Know Your Customer (KYC) Norms எனப்படுகிற ‘‘உங்கள் வாடிக்கையாளமை அறிக’’ விதிமுறைகள்.

## அறிமுகம் (Introduction)

வங்கியாளர்கள் KYC Norms எனப்படும் ‘‘உமது வாடிக்கையாளரை அறிதல்’’ பற்றிய விதிமுறைகள் குறித்து தெளிவாக அறிந்து கொள்வது மிகவும் அவசியம்.

- நல்ல, சிறந்த வாடிக்கையாளர்களைப் பாதுகாத்தல்
- தவறான வாடிக்கையாளர்களைக் களையெடுத்து வெளியேற்றுதல் மற்றும் தவிர்த்தல்
- மேற்கண்ட செயல்முறைகளால் வங்கியைப் பாதுகாத்தல்

இவையே KYC விதிமுறைகளின் முக்கிய நோக்கங்கள். எனவே, வங்கிகள் வணிகத்தில் கவனம் செலுத்துவதைப் போலவே வாடிக்கையாளர் உடனான நல்லுறவு அவர்களது தேவைகள் மற்றும் விருப்பங்களை அறிந்து கொள்ளுதல் போன்றவற்றில் அதீத கவனம் செலுத்த வேண்டியது அவசியம். வங்கியின் கறை படியாத செயல்பாடுகள் வாயிலாக, வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கியாளர்களிடையே பெருந்தன்மையான உறவை உறுதிப்படுத்தி வங்கி வணிகத்தை மேற்கொள்ளவே இந்த KYC விதிமுறைகள். இந்த அடிப்படைக் கோட்பாடு சிறிதும் பிறழாமல் பின்பற்றப்பட வேண்டும்.

## வாடிக்கையாளர் பற்றிய விவரம் (Customer Profile)

வாடிக்கையாளரை அறிதல் என்பது வங்கியியலின் அடிப்படைக் கோட்பாடு, வாடிக்கையாளர் பற்றிய அதிகபட்சமான விவரைங்களை சேகரித்துப் பெற்று இந்திய மற்றும் வங்கியின் சட்ட விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டவராக வாடிக்கையாளர், வங்கியாளர் மற்றும் இவர்களது உறவு அமைதல்

- வாடிக்கையாளர்களின் தேவைகளை அறிதல்
- அவர்களுக்குப் பொருத்தமான சேவைகளை வழங்குதல்
- வாடிக்கையாளர்களது வணிக அளவு, விருப்பங்கள் போன்றவற்றின்

அடிப்படையில் அவர்களை வகைப்படுத்தி, வங்கியின் வணிகத்தை மேம்படுத்துதல் போன்றவற்றை நிறைவேற்ற வேண்டும்.

## இந்திய ரிசர்வ் வங்கியின் அணுகுமுறை மற்றும் நோக்கங்கள் (RBI's Approach and Objectives)

வாடிக்கையாளர் பற்றி விவரங்களைப் பயன்படுத்தி, அவர்களுடைய பரிவர்த்தனைகளை நுணுக்கமாகக் கண்காணித்து, சட்டத்திற்குப் புறம்பான கணக்குகளை அடையாளம் காணுதல் – வாடிக்கையாளரை அறிதல் பற்றிய விதிமுறைகளின் நோக்கங்களில் முக்கியமான ஒன்றாகும்.

வங்கிகளின் சேவைகளை முறைகேடாகப் பயன்படுத்தி, கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குதல் போன்ற குற்றங்கள் பெருகி வரும் இன்றைய சூழலில் – ''உமது வாடிக்கையாளரை அறிதல்'' பற்றிய விதிமுறைகள் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. அதன் விளைவாக புதிய பரிமாணங்களும் தகுந்த வழிகாட்டுதல்களும் அறிமுகம் ஆகியுள்ளன.

தற்பொழுது பெருகி வரும் திட்டமிட்ட பொருளாதாரக் குற்றங்கள். உலகப் பொருளாதாரலம் மற்றும் அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலை

ஏற்படுத்தியுள்ளன. இதனை எச்சரிக்கை மணியாக எடுத்துக் கொண்ட இந்திய ரிசர்வ் வங்கி, தகுந்த ஆய்வுகளுக்குப் பிறகு வங்கிகளுக்கு பல்வேறு வழிகாட்டு தல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது.

பல்வேறு பொருளாதாரக் குற்றங்கள் பற்றிய விழிப்புணர்வையும், ''உமது வாடிக்கை யாளரை அறிதல்'' பற்றிய விதிமுறைகள் மற்றும் ரிசர்வ் வங்கயின் வழிகாட்டுதல்கள் பற்றிய தெள்ளிய அறிவையும் ஒவ்வொரு வங்கியாளரும் பெற்றிருக்க வேண்டியது அவசியம்.

- நாட்டுக்குள்ளும், உலக அளவிலும் வங்கிகளைப் பயன்படுத்தி ''பணச்சலவை (Money Laundering)" போன்ற பொருளாதாரக் குற்றங்கள் நிகழ்வதைத் தடுத்தல்

- வாடிக்கையாளர்களின் தரம் மற்றும் தன்மைகளை வங்கிகள் உரிய முறையில் அறிந்துகொண்டு, தங்களுக்கு நேரக் கூடிய ஆபத்துகளை கூர்மையாகத் தவிர்த்துக்கொள்ள உதவுதல் போன்றவையே ரிசர்வ் வங்கியின் நோக்கங்களாகும்.

- அதன்படி அனைத்து வங்கிகளும் தங்களுக்குப் பொருத்தமான ''உமது வாடிக்கையாளரை அறிதல்'' பற்றிய கொள்கைகளை நிர்வாக அளவில் வகுத்துக் கொள்ள வேண்டும்.

- வங்கி வணிகத்தில் ஈடுபடும் அனைத்து கிளைகள் மற்றும் பிரிவுகள் அந்தக் கொள்கைகளின் அடிப்படையிலான விதிமுறைகளை எச்சரிக்கையுடன் கூடிய கவனத்துடன் பின்பற்ற வேண்டும்.

**ரிசர்வ் வங்கி வகுத்துள்ள ''உமது வாடிக்கையாளரை அறிதல்'' பற்றிய கொள்கைகள்**

வாடிக்கையாளர் பற்றிய அறிதல் கொள்கைகள் இந்திய ரிசர்வ் வங்கியால்

மேம்படுத்தப்பட்டு **25.2.2016** அன்று கட்டாயமான வழிகாட்டுதலாக அடையாளப்படுத்தப் பட்டது. இந்த கொள்கைகளில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களை இந்திய ரிசர்வ் வங்கி மேம்படுத்தியுள்ளது.

வாடிக்கையாளர் அறிதல் கொள்கைகளில் முக்கியமான தூண்களாக

1. வாடிக்கையாளர் ஏற்புக் கொள்கை
2. வாடிக்கையாளரை அடையாளப்படுத்துதல்
3. இடர் மேலாண்மை மற்றும்
4. பரிவர்த்தனைகளை கண்காணித்தல்.

ஆகியவை அமைந்துள்ளது.

## 1. வாடிக்கையாளர் ஏற்புக் கொள்கை (Customer Acceptance Policy - CAP)

வாடிக்கையாளரை ஏற்பது அல்லது ஏற்க மறுப்பது பற்றிய தேர்வு முறைகளை இந்தக் கொள்கை வரையறுக்கிறது

- இதன்படி, அறியப்படாத புனையப்பட்ட பெயர்கள் மற்றும் இரவல் பெயர்களில் (Anonymous/Fictitious/Benami Names) கணக்குகள் தொடங்கப்படக் கூடாது.
- கணக்குத் தொடங்கப்படும்போது, விண்ணப்தாரரின் அடையாளம், முகவரி போன்ற விவரங்களுக்கான ஆதாரங்களை வங்கி முழு கவனத்துடன் ஆய்ந்து அவற்றுக்கான ஆவணங்களைப் பெற வேண்டும். இந்த விதிமுறைகளுக்குக் கட்டுப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும். விண்ணப்பம் மற்றும் ஆவணங்களின் நம்பகத் தன்மையில் குறைகள் காணப்படும் பட்சத்தில், எந்தவித சுய சமாதானமும் (Compromise) செய்துகொள்ளாமல் நிராகரித்துவிட வேண்டும்.

- முன்னரே உள்ள கணக்குகளிலும் கூட இத்தகைய தவறுகள் காணப்படின் அந்த கணக்குகள் தொடரப்படக் கூடாது.

- விண்ணப்பதாரரின் அடையாளத்தை உறுதி செய்யும்போது, குற்றப் பின்னணி உள்ளவர்கள், தீவிரவாத அமைப்புகள் போன்று தடை செய்யப்பட்ட இயக்கங்கள், சட்ட மீறல் குற்றமுள்ளவர்கள் போன்றவர்கள் வங்கி வட்டத்துக்குள் வந்துவிடாத வண்ணம் எச்சரிக்கை கையாளப்பட வேண்டும்.

- மற்றொரு நபர் அல்லது அமைப்பின் சார்பாக கணக்கினை இயக்க ஒரு வாடிக்கையாளரோ அல்லது புதிய மனிதரோ நியமிக்கப்படும்போது அதன் அவசியத்தையும், பின்னணியையும் தெளிவுற ஆராய வேண்டும். கணக்கில் நிகழும் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை, பண அளவு, சட்ட மீறல் இல்லாமை போன்றவை கண்காணிக்கப்பட வேண்டும்.

- வங்கி பெறும் விவரங்கள் மற்றும் ஆவணங்கள், கறுப்புப் பணப் பரிமாற்றத் தடைச்சட்டம் (Prevention of Money Laundering Act) மற்றும் இடர் மேலாண்மை (Riskl Management) போன்றவற்றை கவனத்தில் கொண்டே அமைய வேண்டும்.

## 2. வாடிக்கையாளர் அடையாளம் காணும் வழிமுறை (Customer Identification Procedures)

புதிய கணக்கு துவங்கும்போதும் அல்லது முன்னரே உள்ள கணக்குகளை ஆய்வு செய்யும் போதும் – வங்கியாளர் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்

- வாடிக்கையாளரை அடையாளம் காணுதல் என்பது – சமர்ப்பிக்கப்பட்ட நம்பகத்திற்குரிய ஆவணங்கள் மற்றும் தகவல்களை சரி பார்த்து அவரது அடையாளங்களை உறுதி செய்தலே ஆகும்.

- வங்கிக்கு ஒரு புதிய வாடிக்கையாளர் அனுமதிக்கப்படும் போதும், கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய வகையில் நிகழும் பரிவர்த்தனைகளின் போதும், முன்னரே உள்ள வாடிக்கையாளரின் அடையாளச் சான்று ஆவணங்களின் உண்மைத் தன்மையில் ஐயப்பாடுகள் ஏற்படும் போதும் – வங்கி வகுத்துள்ள கொள்கையில் மற்றும் விதிமுறைகளில் இருந்து சிறிதளவும் பிறழாமல் செயல்பட வேண்டும்,

- வாடிக்கையாளர் ஒரு இயல்பான தனி மனிதர் (Natural Person) எனில், அவரது அடையாளம், முகவரி, தொழில் போன்று கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை உறுதி செய்யும் நம்பகத் தன்மை உள்ள ஆவணங்கள் பெறப்பட வேண்டும்.

**வாடிக்கையாளர் சட்டப்பூர்வமாக செயல்படும் அமைப்பு அல்லது நிறுவனம் (Legal Persons) எனில்,**

1. அந்த அமைப்பின் சட்டரீதியான தகுதிநிலை (Legal Status) உகந்த ஆவணங்கள் வாயிலாக சரிபார்க்கப்பட வேண்டும்.

2. அத்தகைய அமைப்பின் சார்பாக செயல்படக் கோருகிறவர்களுக்கு அமைப்பு வழங்கியுள்ள அங்கீகாரம் முறையாக உள்ளதா எனவும், அவரது அடையாளத்தையும் உரிய ஆவணங்கள் வாயிலாக உறுதி செய்ய வேண்டும்.

3. அமைப்பின் உரிமை எவருக்கு உரியது என்பதையும், அதன் கட்டமைப்பையும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். பின்னர், அந்த

அமைப்பின் சார்பாக செயல்படும் தனிநபர் (Natural Person)அனைத்து தகுதிகளும் உள்ளவரா
என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

## அலுவலக ரீதியாக மதிப்புள்ள ஆவணங்கள் (Officially Valid Documents – OVD)

இந்திய அரசு 6 அலுவலக ரீதியாக மதிப்புள்ள ஆவணங்களை அடையாளச் சான்றாவணமாக அறிவித்துள்ளது. இவையானவ

- கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்)
- ஓட்டுநர் உரிமம்,
- வாக்காளர் அடையாள அட்டை
- வருமானவரிக் கணக்கு அட்டை,
- UIDAI வழங்கும் ஆதார் அட்டை மற்றும்
- NREGA வழங்கும் பணி அட்டை

இவற்றுள் ஏதாவது ஒன்றை அடையாளச்சான்றாவணமாக அளிக்கலாம். இவற்றில் வாடிக்கையாளரின் முகவரியும் இருக்குமானால், அதுவே முகவரிச் சான்றாவணமாக ஏற்றுக் கொள்ளப்படும். முகவரி இல்லாத பட்சத்தில் முகவரியுடன் கூடிய வேறொரு சான்றாவணத்தை அளிக்க வேண்டும்.

அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணங்கள் எதுவும் இல்லாதபட்சத்தில், வங்கிக் கணக்கை (கட்டுப்பாடுகளுடன் கூடிய சிறு கணக்குகள் போல்) தொடங்க முடியும். அடையாளச் சான்றாவணத்திற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதாவது ஒன்றைக் கொடுத்து சாதாரண வங்கிக் கணக்கைத் தொடங்க முடியும்.

- மத்திய/மாநில அரசுத் துறைகள், சட்டரீதியான/நெறிமுறை அதிகாரிகள் பொதுத்துறை நிறுவனங்கள், பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள், பொதுத் துறை நிதி நிறுவனங்கள் வழங்கிய புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை

(அல்லது)

- கெசட் அதிகாரி கையொப்பமிட்டு அத்தாட்சி அளிக்கும் கடிதம் (புகைப்படத்துடன்).

**முகவரிச் சான்றிற்குப் பின்வரும் ஏதாவது ஒரு ஆவணம்**

- சமீபத்திய இரண்டு மாத காலத்திற்குரிய பயன்பாட்டு பில்கள் (உம். மின்சாரம், தொலைபேசி, கைபேசி, சமையல் எரிவாயு, குடிநீர் வரி போன்றவை).
- சொத்து/நகராட்சி வரி ரசீது
- அஞ்சல் அலுவலக சேமிப்புக் கணக்கு/வங்கிக் கணக்கு அறிக்கை
- பொதுத் துறை அலுவலகங்கள்/அரசுத் துறைகள் வழங்கும் முகவரியுடன் கூடிய ஓய்வூதிய ஆணைகள்.
- மத்திய/மாநில அரசுத் துறைகள் சட்டரீதியான நெறிமுறையாளர்கள் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள், பொதுத் துறை நிறுவனங்கள், பொதுத் துறை நிதி நிறுவனங்கள், பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட குழுமங்கள் தத்தம் பணியாளர்களுக்குக் குடியிருப்புக்காக வழங்கும் ஆணைகள் அலுவலக ரீதியாக இத்தகு நிறுவனங்களுடன் குடியிருப்புக்காக ஏற்படுத்திக் கொள்ளும் உரிமத்திற்கான ஒப்பந்தங்கள்.
- அயல்நாட்டு ஆட்சிப்பரப்பெல்லையுடைய அரசுத் துறைகள் அல்லது இந்தியாவிலுள்ளஅயல்நாட்டுத் தூதரங்கள் வழங்கும் ஆவணங்கள்.

மேலே குறிப்பிட்டவை பொதுவான வழியாகாது. இவ்வாறு எளிமையாக்கப்பட்ட செயல்முறையை ஒரு வாடிக்கை யாளர்களுக்காக ஏற்றுக் கொள்ளலாமா என்பது வங்கியின் முடிவிற்கு விடப்படுகிறது.

பெயர் மாற்றப்பட்டு, அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணங்கள் புதிய பெயரில் இல்லாவிட்டால், வங்கிக் கணக்கைத் தொடங்க மாநில அரசு வழங்கும் திருமணப் பதிவுச் சான்றிதழ்/பெயர் மாற்றம் அறிவிக்கப்பட்ட அரசிதழ் ஆகியவற்றுடன் பழைய பெயரில் உள்ள ஏதாவது மதிப்புடைய சான்றா வணத்தின் நகலுடன் (சான்றொப்பமிடப்பட்டது) வங்கியிடம் அளிக்கலாம். திருமணம் அல்லது பெயர் மாற்றம் செய்தவர்கள் மேற்குறிப்பிட்ட வகையில் வங்கியை அணுகி புதிய பெயரில் கணக்குத் தொடங்கலாம்.

- கணக்குத் தொடங்கும்போதும், ரூ.50,000/–க்கு அதிகமான பணம் / பணம் சாரா பரிவர்த்தனைகளில் வருமான வரிக் கணக்கு எண் குறிப்பிடப்பட வேண்டும்.
- உள்நாட்டில் ரூ.50,000/–மும் அதற்கும் அதிகமாகப் பணம் அனுப்பும்போதும் அயல்நாட்டுக்குப் பணம் அனுப்பும்போதும் அத்தகைய பரிவர்த்தனைகளுக்கு கேஒய்சி நடைமுறையைப் பூர்த்தி செய்வது அவசியம்.

வங்கியில் கணக்கு வைத்திராத வந்துபோகும் வாடிக்கையாளர்கள் தங்களின் அடையாளம் மற்றும் முகவரி சான்றாவணங்களை வங்கியில் காட்டியே ரூ.50,000 மற்றும் அதற்கும் அதிகமான மூன்றாம் நபர் நிதிப் பொருட்களை வங்கியிடமிருந்து வாங்க முடியும்.

வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் மூன்றாம் நபர் நிதிப்பொருட்களை வங்கியிடமிருந்து வாங்க முடியும். வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் மூன்றாம் நபர் நிதிப் பொருட்களை வாங்கும்போது கேஒய்சி நடைமுறை தேவையில்லை.

ஆயினும், வங்கிக் கணக்கில் பற்று வைத்து ரூ.50,000 மற்றும் அதற்கும் அதிகமான மதிப்புள்ள மூன்றாம் நபர் நிதிப்பொருட்கள் சார்ந்த பரிவர்த்தனைகளை (பணமாற்றம்/காசோலை கொடுத்து தங்கம்/பிளாட்டினம்

வாங்குதல் போன்றவை) மேற்கொள்ளும்போது, வருமானவரிக் கணக்கு எண்ணைக் குறிப்பிட வேண்டியது அவசியம். இதுவந்துபோகும் வாடிக்கையாளருக்கும் பொருந்தும்.

வங்கிகள் கேஒய்சி பதிவேடுகளில் உள்ள விவரங்களை அவ்வப்போது திருத்தியமைத்து சரிவர பராமரிப்பது அவசியமாகும். வங்கிக்கணக்கு மேலாண்மையில் இது முக்கியமானது. இடர்வரவு மதிப்பீட்டின்படி, வங்கிகள் கேஒய்சி தகவல்களைப் புதுப்பிக்கும் காலவரையறை நிர்ணயிக்கப்படும். இதனால் வங்கிக் கணக்குகளில் மோசடிகள் நிகழ்வதும் தடுக்கப்படும்.

### 3. வாடிக்கையாளரின் பரிவர்த்தனைகளை கண்காணித்தல் (Monitoring of Customer Transactions)

வாடிக்கையாளரின் பரிவர்த்தனைகளைக் கண்காணிப்பது என்பது மிக முக்கியமானதும், அவசியமானதும் ஆகும்.வங்கி வகுத்துள்ள கொள்கையின்படி, வழக்கமான பரிவர்த்தனைகளின் தன்மை மற்றும் அளவு (Type and Size) மதிப்பீடு செய்யப்பட வேண்டும். வாடிக்கையாளருக்கு சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டுள்ள நடவடிக்கை **எல்லைகளை கடந்து பரிவர்த்தனைகள்** நிகழும்போது, அவை உடனடியாக அடையாளம் காணப்பட வேண்டும். அடுத்த கட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டின் சட்டத்திற்கும், பொருளாதாரத்திற்கும் ஊறு விளைவிக்கும் வகையில் நிகழும் வழக்கத்திற்கு மாறான, பெரிய அளவிலான பரிவர்த்தனைகள் மீது தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஒரு பரிவர்த்தனை தனிப்பட்ட முறையில் பார்க்கும்போது, அனுமதிக்கப்பட்ட சட்ட வரம்புகளுக்குள் இருப்பதாகத் தோன்றும்.ஆனால், இத்தகைய பல பரிவர்த்தனைகள் மிகவும் திறமையுடன் ஒரு தொகுப்பாக நிகழ்த்தப்பட்டு, பெரும் பொருளாதாரக் குற்றங்கள் நிகழ வாய்ப்பு உள்ளது.

சாதாரணமாக ஒரு வாடிக்கையாளர், அவரது தகுதி மற்றும் அவர் மேற்கொள்ளவும் வழக்கமான நடவடிக்கைகளுக்குப் பொருந்தாத வகையில் திடீரென பெரிய அளவிலான தொகைகள் அடங்கிய பணப் பரிவர்த்தனைகளை நிகழ்த்தும்போது, வங்கி அதிகமான எச்சரிக்கையுடன் கவனம் செலுத்த வேண்டும்.

அடையாளம் காணப்பட்ட வாடிக்கையாளரின் வருமானம், சராசரியாக கணக்கில் உள்ள இருப்புத் தொகை ஆகிய இவற்றுக்குப் பொருந்தாத வகையில் பெரும் தொகைகளுடன் வழக்கத்திற்கு அதிகமான எண்ணிக்கையில் பரிவர்த்தனைகள் நிகழ்த்தப்படும் கணக்குகள் உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டும். அந்தக் கணக்குகள், சட்டத்திற்குப் புறம்பான கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதற்குப் பயன்படுத்தப்படலாம்.

ரூ.10.00 இலட்சம் மற்றும் அதற்கும் மேலான பணப் பரிவர்த்தனைகள், வங்கியில் முறையாக பதிவு செய்யப்பட வேண்டும். அவற்றில் சந்தேகத்திற்கு உரியவற்றைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ள, ஓர் உள் கண்காணிப்பு முறையை (Internal Monitoring System) மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் வாடிக்கையாளரை அறிதலில் அடுத்த முக்கியமானதோர் அம்சம் ''இடர் மேலாண்மை (Risk Management)'' ஆகும். நீண்ட காலமாக வங்கிகள் பல இதன் முக்கியத்துவத்தை உணராமல் இருந்தன. சமீப காலமாக வங்கிகள் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு முழு கவனத்துடனும் எச்சரிக்கையிடன் செயல்பட வலியுறுத்தப்பட்டு வருகிறது. இது பற்றி காண்போம்.

## 4. இடர் மேலாண்மை (Risk Management)

வங்கியில் பல்வேறு வகையான வாடிக்கையாளர்கள் உள்ளனர். அவர்களை அடையாளம் காணும் பொருட்டு பெறப்படும் தகவல்கள் மற்றும் ஆவணங்கள், ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி அமைந்திட வேண்டும்.

வங்கி,தனது வாடிக்கையாளர்களை –

1. குறைந்த இடர் (Low Risk) வாடிக்கையாளர்கள்
2. நடுத்தர மற்றும் அதிக இடர் (Medium and High Risk) வாடிக்கையாளர் களை என வகைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## குறைந்த இடர் (Low Risk) வாடிக்கையாளர்கள்

சாதாரண தனி நபர்கள் மற்றும் சட்டப்பூர்வமான அமைப்புகள் இந்த வகையில் அமைவர். இவ்வகையினரின் அடையாளம் மற்றும் வருமான ஆதாரம் போன்றவற்றை எளிதாக உறுதி செய்ய முடியும். பெறப்பட்ட அடையாளம் மற்றும் தகவல்களுக்கு இணங்க, இத்தகைய கணக்குகளின் பரிவர்த்தனைகள் அமையும். மாத ஊதியம் பெறுவோர், அரசுத் துறைகள், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள், சட்ட அமைப்புகள் போன்ற வாடிக்கையாளர்கள் இந்த வகையில் அடங்குவர். இந்த வகையினர், வங்கியின் அடிப்படைத் தேவைகளான அடையாளம், முகவரி போன்ற தகவல்களைப் பூர்த்தி செய்தால் போதுமானது. பெரும் பணக்காரர்கள் (High Networth Indviduals) இந்த வகையில் இடம்பெற மாட்டார்கள்.

## நடுத்தர மற்றும் அதிக இடர் (Medium and High Risk) வாடிக்கையாளர்கள்

சராசரியைவிட அதிகப்படியான இடர்களை வங்கிக்கு ஏற்படுத்தக் கூடிய தன்மை பொதிந்தவர்களாக இவ்வகை வாடிக்கையாளர்கள் அமைவர்.

- வாடிக்கையாளர்களின் பின்னணி
- மேற்கொள்ளும் செயல்பாடுகளின் இயல்பு
- பணி, தொழில் மற்றும் வாழும் இடம்
- சொந்த நாடு

- நிதி ஆதாரங்கள்

- பரிவர்த்தனைகளின் அளவு மற்றும் பரிவர்த்தனைகளுக்கு இடையேயான கால இடைவெளிகள்

குறிப்பாக சட்ட வரம்புகளை மீறுகிய பெரிய அளவிலான பரிவர்த்தனைகள் போன்றவற்றை அடிப்படையாக வைத்து இத்தகைய வாடிக்கையாளர்கள் தரம் பிரிக்கப்படுவர். இத்தகைய வாடிக்கையாளர்களை அடையாளம் காணும் போதும், கணக்கினை கண்காணிக்கும் போதும் மிகுந்த எச்சரிக்கை கடைப்பிடிக்க வேண்டும். நடுத்தர மற்றும் அதிக இடர் (Medium and High Risk) வாடிக்கையாளர்கள் வகையில் சில உதாணங்கள் பின்வருமாறு:

- அயல்நாடு வாழ் இந்தியர்கள்

- பெரும் செல்வந்தர்கள் (High Networth Persons)

- அரசு ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர் (Pottentials)

- அறக் கட்டளைகள் மற்றும் சேவை நிறுவனங்கள்

- அயல்நாடுகளில் நன்கொடை வசூலிக்கும் அரசு சாரா நிறுவனங்கள் (NGOs)

- அயல்நாடுகளில் வணிகம் செய்யும் நிறுவனங்கள்

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல் பிரபலங்கள்

- ஒரே குடும்பத்தினர் பெரும்பாலான பங்குகளைத் தன் வசம் வைத்திருக்கும் நிறுவனங்கள்

- செயல்படா துணைவர்களைக் கொண்ட நிறுவனங்கள்(Firms with Sleeping Partners)

- சந்தேகத்திற்குரிய நேரடி தொடர்பு இல்லாத வாடிக்கையாளர்கள் (Non-face-to-face customers with dubluous reputation) போன்றவர்கள் இந்த வகையில் அடங்குவர்.

**“சிறுகணக்கு”**

சிறுகணக்கு துவங்க சமீபத்தில் எடுக்கப்பட்ட வாடிக்கையாளர் புகைப் படத்துடன் வங்கி அதிகாரி முன்னிலையில் கையொப்பம்/கைநாட்டு வைத்து சிறுகணக்கைத் தொடங்கலாம்.

- சிறுகணக்குகளில் எந்தவொரு சமயத்திலும் நிலுவைத் தொகை ரூ.50,000/—ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

- ஒரு ஆண்டில் வரவு வைக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.1,00,000/—க்கும் அதிகமாக இருக்கக்கூடாது.

- ஒரு மாதத்தில் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட பணம் அல்லது மாற்றப்பட்ட பணம் ரூ.10,000/—ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

- அயல்நாட்டிலிருந்து வரும் பணம் இத்தகு கணக்குகளில் வரவு வைக்கப்பட மாட்டாது.

முதலில் இத்தகு கணக்குகள் 12 மாதங்கள் வரை மட்டுமே செயல்பாட்டில் இருக்கும். அதன்பின்னர் கணக்கு வைத்திருப்பவர் கணக்குத் தொடங்கி ஒரு வருடத்திற்குள்ளதாவதுஅடையாளச்சான்றாவணத்திற்கு விண்ணப்பித்ததற்கான சான்றைக் காட்டும்பட்சத்தில் மேலும் 12 மாதங்களுக்கு செயல்பாட்டுடன் விளங்கும். கே.ஒய்.சி. க்கு தேவையான ஆவணங்களைத் தராவிட்டால், வங்கியால் வாடிக்கையாளரின் இக்கணக்கினை தொடங்க முடியாது.

**வாடிக்கையாளர் பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த விவரங்கள் (Qualitative Data about Customers)**

புதிய மற்றும் முன்னரே உள்ள அனைத்து கணக்குகளுக்கும் தனித்தனியே "வாடிக்கையாளர் சுய விவரக் குறிப்பு (Customer Profile)" தயாரிக்கப் பட்டு, தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டும். ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு மாற்றலாகி வரும் கணக்கிற்கும் புதிய விண்ணப்பப் படிவம் பெறப்பட்டு சமீபத்திய வாடிக்கையாளர் விவரக் குறிப்பு தயாரிக்கப்பட வேண்டும். அதே போன்று இயக்கமில்லா கணக்கு (Inoperative Account) ஒன்று இயங்கும் கணக்காக மாற்றப்படும் போதும் மேற்கண்ட வழிமுறை பின்பற்றப்பட வேண்டும்.

**பல்வகை கணக்குகள் – பெறப்பட வேண்டிய ஆவணங்கள்**

தனி நபர்கள், நிறுவனங்கள், அரசுத் துறைகள், அறக்கட்டளைகள், சேவை நிறுவனங்கள் என பல்வகை கணக்குகள் வங்கிகளில் துவங்கப்படுகின்றன. கணக்குகளை இயக்குகிறவர்களின் அடையாளச் சான்றுக்காக புகைப்படத்துடன் கூடிய அடையாளச் சான்றும், முகவரிக்கான சான்றும் அடிப்படையாக பெறப்படுவது வழக்கம். தவிர, பொதுவாக வங்கிகளில் துவங்கப்படும் கணக்குகள் மற்றும் பெறப்பட வேண்டிய ஆவணங்கள் (அசல் ஆவணங்களோடு ஒப்பிடப்பட்டு உறுதி செய்யப்பட்ட நகல்கள் (Copies verified with originals) பற்றி வங்கியாளர்கள் தெளிவுற அறிந்திருக்க வேண்டும்.

**தனிநபர் கணக்குகள் (Individual Accounbts)**

**பெயருக்கான ஆதார ஆவணங்கள் (Name Proof)**

1. கடவுச் சீட்டு,
2. வருமான வரி நிரந்தரக் கணக்கு எண் அட்டை,
3. வாக்காளர் அடையாள அட்டை,
4. ஓட்டுநர் உரிமம்,

5. வங்கிக்கு ஏற்புடைய அடையாள அட்டை,

6. விண்ணப்பதாரரின் அடையாளம் மற்றும் முகவரியை உறுதி செய்து அங்கீகரிக்கப்பட்ட பொது அதிகாரம் உடையவர் அல்லது அரசுப் பணியில் உள்ளவர் வங்கிக்கு திருப்தியளிக்கும் வகையில் வழங்கும் கடிதம்,

7. ஆதார் அட்டை நிரந்தர முகவரி மற்றும் இதர விவரங்கள் குறித்த ஆவணங்கள் பற்றியும், நிறுவனங்கள், அறக்கட்டளைகள் போன்ற பல்வகை கணக்குகளுக்கான ஆவணங்கள் பற்றியும் இனி காணலாம்.

**தனிநபர் கணக்குகள் (Individual Accounts)**

**சரியான நிரந்தர முகவரிக்கான ஆதார ஆவணங்கள்**

1. தொலைபேசி கட்டணச் சீட்டு,
2. பிற வங்கிக் கணக்குப் புத்தகம்,
3. அங்கீகரிக்கப்பட்ட பொது அதிகாரம் உடையவர் அல்லது அலசுப் பணியில் உள்ளவர் வங்கிக்கு திருப்தியளிக்கும் வகையில் வழங்கும் கடிதம்,
4. குடும்ப அட்டை,
5. மின் கட்டணச் சீட்டு,
6. வங்கிக்கு ஏற்புடைய வகையில் வேலை அமர்த்துனரிடம்(Employer) இருந்து கடிதம்,
7. ஆதார் அட்டை

**நிறுவனங்களின் கணக்குகள் (Instituitonal Accounts)**

நிறுவனத்தின் பெயர், வணிகம் மேற்கொள்ளும் இடம், தகவல் தொடர்புக்கான முகவரி, தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் எண்கள் போன்றவற்றுக்கான ஆதார ஆவணங்கள்

1. நிறுவனம் சட்டப்பூர்வமாக ஒருங்கிணைக்கப்பட்ட சான்றிதழ் (Certificate of Incorporation),

2. அமைப்பு முறையின் விதிகள் மற்றும் முறைகள் (Memorandum and Articles of Association)

3. வங்கியில் கணக்கு தொடங்க, நிர்வாகக் குழு இயக்குநர்கள் நிறைவேற்றிய தீர்மானம்,

4. கணக்கை இயக்க அங்கீகாரம் வழங்கப்பட்டவர்களின் அடையாளம்,

5. பவர் ஆப் அட்டார்னி,

6. மின் கட்டணச் சீட்டு,

7. வருமான வரி நிரந்தரக் கணக்கு எண் ஒதுக்கப்பட்ட கடித நகல்,

8. தொலைபேசி கட்டணச் சீட்டின் நகல் போன்றவை

**நிறுவனத்தின் சட்டப்பூர்வ பெயர் (Legal Name) மற்றும் முகவரி, அனைத்து கூட்டாளர்களின் (Partners) பெயர்கள் மற்றும் முகவரிகள், நிறுவனம் மற்றும் கூட்டாளர்களின் தொலைபேசி எண்கள் போன்றவற்றுக்கான ஆதார ஆவணங்கள்**

பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆயின்,

1. பதிவுச் சான்றிதழ்

2. கூட்டாண்மைப் பத்திரம்

3. நிறுவனத்தின் சார்பில் வணிக செயல்பாடுகளை மேற்கொள்ளவும் கூட்டாளர் அல்லது பணியாளருக்கு வழங்கப்பட்ட பகர அதிகார ஆவணம்,

4. கூட்டாளர்கள் மற்றும் பகர அதிகார ஆவணம் வழங்கப்பட்டவர்களின் அடையாளம் மற்றும் முகவரிகளை உறுதி செய்யும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று

5. நிறுவனம் மற்றும் கூட்டாளர்களின் பெயர்களில் உள்ள தொலைபேசிகளின் கட்டணச் சீட்டுகள் போன்றவை புதிய வாடிக்கையாளர் அனுமதிக்கப்படும்போது, வாடிக்கையாளர் பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த விவரங்கள் (Qualitative Data about Customers)

தெளிவுற அறியப்பட்டு வங்கியில் பதிவு செய்யப்பட வேண்டும். வங்கி பெற வேண்டிய முக்கிய விவரங்கள் பற்றியபகுதியில் அறக்கட்டளைகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் கணக்குகளுக்கான ஆதார ஆவணங்கள் பற்றியும், மேற்கொண்டு பின்பற்ற வேண்டிய KYC விதிமுறைகள் பற்றியும் இனி காணலாம்.

## அறக்கட்டளைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கான கணக்குகள்

**பொறுப்பாட்சியர் (Trustees) தீர்வு செய்பவர்கள் (Settlers) , பயனாளிகள் மற்றும் கையொப்ப அங்கீகாரம் பெற்றவர்களின் பெயர்கள், நிறுவனர் (Founder), இயக்குநர்கள், மேலாளர்கள் மற்றும் பயனாளிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள், தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் எண்கள் போன்றவற்றுக்கான ஆதார ஆவணங்கள்:**

**பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆயின்,**

1. பதிவுச் சான்றிதழ்,

2. நிறுவனத்தின் சார்பில் வங்கிச் செயல்பாடுகளை மேற்கொள்வோருக்கு வழங்கப்பட்ட பகர அதிகார ஆவணம் (Power of Attorney),

3. பொறுப்பாட்சியர்கள், தீர்வு செய்பவர்கள், பயனாளிகள், பகர அதிகாரம் வழங்கப்பட்டவர்கள், நிறுவனர், இயக்குநர்கள் மற்றும் மேலாளர்களின் அடையாளம் மற்றும் முகவரிகளை உறுதி செய்யும் ஆவணங்கள்,

4. வங்கியில் கணக்கு தொடங்க, நிர்வாக அமைப்பு நிறைவேற்றிய தீர்மானம்,

5. தொலைபேசிகளின் கட்டணச் சீட்டுகள்

**புகைப்படங்கள்**

புதிய கணக்குகள் தொடங்கப்படும் போது ஒவ்வொரு விண்ணப்பதாரரிடம் இருந்தும் அவரது சமீபத்திய புகைப்படம் பெறப்பட வேண்டும். அந்த புகைப்படம் வங்கிக்கு திருப்தியளிக்கும் வகையில் அமைய வேண்டும். கணக்கு தொடங்கப்படும் போதே புகைப்படம் பெறப்பட வேண்டுமே அல்லாது, பின்னர் ஒரு தேதியில் அதனைப் பெறுவது கூடாது. அறக்கட்டளைகள், நிறுவனங்கள் போன்றவற்றின் வங்கிக் கணக்குகளை நிர்வகிப்பவர்களிடம் இருந்து புகைப்படங்கள் பெறப்பட வேண்டும். சில பெண்கள் முகத்தை மூடி பர்தா (Pardanashin Women) அணியும் வழக்கம் உடையவர்களாக இருப்பர். அவர்களிடமும் கட்டாயமாக புகைப்படம் பெறப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும்.

ஓட்டுநர் உரிமம், கடவுச் சீட்டு போன்றவற்றின் நகல்கள் புகைப்பட ஆதாரமாகாது.

முதிரா வயதினர் (Minor) கணக்குகளைப் பொருத்த வரை, அவரது காப்பாளரின் (Guardian) புகைப்படம் மட்டுமே பெறப்பட வேண்டும். அந்த முதிரா வயதினர் சட்டப்பூர்வ வயது முதிர்வை அடையும்போது, அவரது புகைப்படம் பெறப்பட்டு, காப்பாளரின் மேலொப்பம் (Counter Signature) பெறப்பட வேண்டும். புதிய விண்ணப்பப் படிவம் பெறப்பட்டு, அன்றைய நிலையில் உள்ள வாடிக்கையாளர் விவரக் குறிப்பு (Customer Profile) உருவாக்கப்பட வேண்டும். வாடிக்கையாளரது புகைப்படம் விண்ணப்பப் படிவத்தில் ஒட்டப்பட வேண்டும்.

வங்கி அலுவலரின் முன்னிலையில் வாடிக்கையாளர் கையொப்பம் பெறப்பட வேண்டும். கல்வி பயிலாதவரிடம் பெருவிரல் பதிவு பெறப்பட வேண்டும். கையொப்பம்/பெருவிரல் பதிவுகளின் ஒரு பகுதி புகைப்படத்தின் மீதும், எஞ்சிய பகுதி விண்ணப்பத்தின் மீதும் அமைய வேண்டும். ஒரு சிறிய, வட்ட வடிவ, வங்கி

இரப்பர் முத்திரை புகைப்படத்தின் கீழ்ப்பகுதியில் இடப்பட வேண்டும். அதன் ஒரு பகுதி புகைப்படத்தின் மீதும், எஞ்சிய பகுதி விண்ணப்பத்தின் மீதும் அமைய வேண்டும்.

**கணக்குகளைக் கண்காணித்தல் (Monitoring of Accounts):**

நம் நாட்டில் உள்ள ரிசர்வ் வங்கி போன்று ஒவ்வொரு நாட்டிலும் ஒரு மத்திய வங்கி (Central Bank) உள்ளது. அத்தகைய வங்கிகள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு தொடர்ந்து புதுப்புது நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், கறுப்புப் பணப் பரிமாற்றங்களும், பொருளாதாரக் குற்றங்களும், தீவிரவாத அமைப்புகள் தங்கள் பயங்கரவாத செயல்களுக்கான பணத் தேவைகளுக்காக கோடிக் கணக்கில் பணத்தைக் குவித்துக் கொள்வதும் தொடர்ந்து உலகெங்கிலும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. எந்தக் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்பதைப் போல், எந்தக் கணக்கில் எந்தக் குற்றம் நடக்கிறதோ என்கிற எச்சரிக்கை உணர்வுடனே எப்போதும் செயல்பட வேண்டும்.

புதிய வாடிக்கையாளர் அனுமதிக்கப்படும்போது, வங்கி பெற வேண்டிய முக்கிய விவரங்கள் பற்றிய பகுதிகளில் அறக்கட்டளைகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் கணக்குகளுக்கான ஆதார ஆவணங்கள் மற்றும் புகைப்படம் பெறுதல் பற்றி கண்டோம்.

**மேற்கொண்டு பின்பற்ற வேண்டிய KYC விதிமுறைகளைப் பற்றி இனி காண்போம்.**

KYC விதிமுறைகளை சரிவர புரிந்துணர்ந்து செயல்படாத வங்கியாளர்களின் நாட்டுக்கும், வீட்டுக்கும் பேரிடர்கள் ஏற்பதுவது தவிர்க்க முடியாதது. ஏனவே, அத்தகைய பேரிடர்களை தவிர்க்கவும், பொருளாதாரக் குற்றங்களைத் தடுக்கவும், வங்கியாளர்கள் அனைத்துகணக்குகளையும் எச்சரிக்கையுடன் கண்காணிக்க வேண்டியது மிக மிக அவசியம்.

அடிப்படையாக, ஒரு புதிய கணக்கு தொடங்கப் படும்போது, வங்கியைப் பயன்படுத்தி, முறைகேடுகள் செய்யும் நோக்கம் அந்த வாடிக்கையாளருக்கு இல்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அடுத்து முன்னரே உள்ள கணக்குகள் தற்போது உள்ள KYC விதிமுறைகளுக்கு உட்படாதவை எவையெவை என்பதைக் கண்டறிந்து, அவற்றையும் தற்போதைய நிலைக்கு உட்படுத்த வேண்டும். அனைத்து கணக்குகளையும் முறையாகக் கண்காணித்து, தவறான வாடிக்கையாளர்களைத் தவிர்ப்பதுடன், தேவையெனில் சட்டப்பூர்வ நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டும்.

இனி கணக்குகளை கண்காணிக்கும் வழிமுறைகளைக் காணலாம்.

**வாடிக்கையாளர் பற்றிய ஆய்வு (Customer Research)**

வாடிக்கையாளர் பற்றிய அதிகபட்ச தகவல்களை கீழ்கண்ட வழிமுறைகளில் அறிந்து கொள்ளலாம்.

- பரிவர்த்தனை மேசை வாயிலான ஆய்வு (Desk Research), அதாவது, அவரால் பெறப்படும், வழங்கப்படும் காசோலைகள், அவரது கணக்கில் பேரேட்டில் காணப்படும் அனைத்துப் பரிவர்த்தனைகள், அவர் பெற்றுக் கொள்ளும் இதர சேவைகள், கணக்கிலிருந்து வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யப்படும் பணப் பரிவர்த்தனைகள், கடன்கள், வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகைகளை முறையாகச் செலுத்தும் ஒழுக்கம் போன்றவை வாயிலாகவும்,

- வாடிக்கையாளர்கள், அவரை அறிமுகம் செய்தவர், அவரை அறிந்த மற்ற வாடிக்கையாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடுதல், அவர் சொந்தமாக வணிகம் செய்பவராயின வணிகச் சந்தை பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள், அவர் ஏற்பாடு செய்து கொள்ளும் கடன் வசதிகள் போன்றவை,

- அவரது இருப்பிடம் மற்றும் தொழில் புரியும் இடங்களுக்கு அவ்வப்போது மரியாதை நிமித்தமான தொலைபேசி உரையாடல்கள்

- வங்கியின் கணினித் திறனைப் பயன்படுத்தி, வாடிக்கையாளரின் கணக்கு தொடர்பான அனைத்து விவரங்களையும் சேகரித்தல், அதன் வாயிலாக கணக்கின் பரிர்த்தனைகளின் அடிப்படையில்

- வாடிக்கையாளரின் விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள்

- செலவு செய்யும் விதங்கள்

- பரிவர்த்தனைகளின் தன்மைகள் மற்றும் அவற்றின் அளவுகள்

- வங்கிக்கு செலுத்த கடமைப்பட்ட தொகைகளை உரிய நேரத்தில் செலுத்துதல்

போன்ற தகவல்களைத் தொகுத்து வைக்க வேண்டும். இதற்காக தனிப்பட்ட கணினி மென்பொருள் உருவாக்கப்பட்ட வேண்டும். ஆனால், பல வங்கிகள் இத்தகைய மென்பொருளை இனிமேல்தான் தயாரிக்க வேண்டிய நிலையில் உள்ளன. KYC விதிமுறைகளைப் பின்பற்ற உதவிகரமாக இருக்கும் முக்கிய வழிகாட்டுதல்களின் தொகுப்பை இனி காணலாம்.

## முக்கிய வழிகாட்டுதல்களின் குறுந்தொகுப்பு (Compendium of Guidelines)

### அ. புதிய கணக்குகள்

1. ஒவ்வொரு புதிய கணக்கின் பேரேட்டின் பக்கங்கள் மற்றும் வழங்கப்படும்காசோலைகளில் புதிய கணக்கு (New Account) என்கிற முத்திரை பதிக்கப்படலாம். இது கணக்கின் பரிவர்த்தனைகளை விரைந்தும் எளிதாகவும் அடையாளம் கண்டு கண்காணிக்க உதவும். இந்த முறை 3 முதல் 6 மாதங்கள் வரைபின்பற்றலாம்.

2. இக்கணக்குகளில் நிகழும் பணத் திரட்டல்கள் (Collections of funds), பணப்பரிமாற்றங்கள் (Transfers), பல்வகை பரிவர்த்தனைகள் (Operations) அனைத்தும் கூர்ந்த கண்காணிப்புக்கும், ஆய்வுக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

3. பெரிய தொகைகள் கொண்ட காசோலைகள் தீர்வு அல்லது பணப் பட்டுவாடா செய்யப்பட வரும்போது, அவற்றை அனுமதிக்கும் அலுவலர்கள் (ஞயளளயைபே டீககஉைநசள) மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும். தேவைப்பட்டால் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனைகள் நிகழும்போது அதீத கவனம் செலுத்தப்பட
வேண்டும்.

5. கணக்கினைத் துவங்கி வைக்கும் அலுவலர், முலுஊ விதிமுறைகளை முழுமையாகக் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

6. கணக்கு துவங்கும் தேதிக்கு முந்தைய தேதியிட்ட காசோலைகள், ஈவுத் தொகைகள், வட்டி அறிவிப்புக் காசோலைகள், வரைவோலைகள் போன்றவற்றை ஏற்கும்போது அவற்றின் மீதான உரிமை சரியானதா என்பதை மிகவும் கவனத்துடன் பரிசீலிக்க வேண்டும். பெருந்தொகைகள் சம்மந்தப்படும்போது அத்தகைய காசோலைகளை வழங்கியவரைத் தொடர்பு கொண்டு உறுதி செய்து கொள்ளலாம்.

7. கணக்கில் சிறுசிறு தொகைகளாக வரவு வைக்கப்பட்டு திடீரென்று பெருந்தொகையாக முழுமையாக எடுத்து விடுவது போன்று நடந்தால், அத்தகைய பரிவர்த்தனைகள் நியாயமானவைதானா என்பதை உறுதி செய்ய வேண்டும். இதே போன்று தொடர்ந்து நடந்தால் அந்தக் கணக்கின் வாயிலாக

தவறான, குற்றப் பின்னணி கொண்ட பணம் வெள்ளையாக மாற்றப்பட வாய்ப்புள்ளது.

8. கணக்கு தொடங்கப்பட்ட உடனே குறுகிய காலத்திற்குள் பெருந் தொகைகளைக் கொண்ட காசோலைகள் மற்றும் வரைவோலைகள் போன்றவை பணத் திரட்டலுக்காக செலுத்தப்பட்டால் கவனம் தேவை. அந்த ஓலைகளின் உண்மைத் தன்மை மற்றும் நியாயத் தன்மை உறுதி செய்யப்பட வேண்டும். வாடிக்கையாளர் பணம் எடுக்கும் முன்னர், சம்மந்தப்பட்ட பணம் வழங்கும் வங்கியிடம் இரகசியமான விசாரணை செய்து கொள்ளலாம்.

இவை எல்லாம் புதிய கணக்குகள் தொடங்கப்படும் போதும், அதற்குப் பின்னரும் கடைபிடிக்கப்பட வேண்டிய முக்கியமானவழிமுறைகள்.
பொதுவாக, வங்கி வட்டத்திற்குள் புதிய வாடிக்கையாளர்களைக் கொண்டு வர வேண்டும் எனவும், தினந்தோறும் அதிகமான புதிய கணக்குகளைத் தொடங்க வேண்டும் எனவும் ஒரு வங்கியாளருக்கு ஓர் உத்வேகம் இருக்கும். அதற்காக, KYC விதிமுறைகளில் சிறிது அலட்சியம் காட்டினாலோ அல்லது விதிமுறைகளைத் தளர்த்திக் கொண்டாலோ ஏதாவது ஒரு கறுப்பு ஆடு உள்ளே நுழைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய நிகழ்வுகள் வங்கிக்கும், வங்கியில் பணிபுரிவோருக்கும் ஏதாவொரு வகையில் பேரிடர்களை ஏற்படுத்தலாம் அல்லவா? ஆதனால் இந்த எச்சரிக்கைகள் கடைபிடிக்கப்படுவதுடன், நேர்மையான வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படாத வகையிலும் செயல்பட்டு புதிய கணக்குகள் துவங்கப்பட வேண்டும்.

புதிய கணக்குகளைக் கையாளும் வழிமுறைகளைக் கண்டோம். இனி கணக்கில் நிகழும் பணப்பரிவர்த்தனைகளைக் கண்காணிக்கும் வழிமுறைகள் மற்றும் விதிமுறைகளைப் பற்றி காண்போம்.

**ஆ. பணப்பரிவர்த்தனைகள்**

1. ரூ.10 இலட்சம் மற்றும் அதற்கு மேலான தொகைகள், வரவு வைக்கப்பட்டாலோ அல்லது எடுக்கப்பட்டாலோ அத்தகைய பரிவர்த்தனைகள் கண்காணிப்புக்கு உரியவை.

2. அது சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனையாக இருந்தால் வாடிக்கையாளரிடம் உரையாடி ஐயத்தை களைந்து கொள்ள வேண்டும். அவர் தருகிற விளக்கம் திருப்திகரமான அமையாவிடில், அத்தகைய சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனைகள் தலைமை அலுவலகத்தின் சம்பந்தப்பட்ட துறைக்கு மேல் நடவடிக்கைக்காக முறையாக தெரிவிக்கப்பட வேண்டும்.

3. ரூ.10 இலட்சம் மற்றும் அதற்கும் மேலான தொகைகள் இடம் பெறும் பரிவர்த்தனைகள் தனியேடு (Separate Register) ஒன்றில் பதிவு செய்யப்பட வேண்டும்.

4. மாதம் இருமுறை இத்தகைய தகவல்கள் தலைமை அலுவலகத்திற்கு, இதற்கென வடிவமைக்கப்பட்ட படிவத்தில் அனுப்பப்பட வேண்டும். அத்தகைய பரிவர்த்தனைகள் நிகழாத பட்சத்தில், எதுவும் இல்லை (Nil Statement) என்று அறிக்கை அளிக்கப்பட வேண்டும்.

5. தலைமை அலுவலகத்தின் சம்மந்தப்பட்ட துறை அல்லது பிரிவின் அலுவலர்கள் தாமதமின்றி அவற்றை ஆய்வு செய்து, அடையாளம் காணப்படும் சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனைகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

6. ரிசர்வ் வங்கி மற்றும் வங்கியின் ஆய்வுப் பிரிவு அலுவலர்களுக்கு எந்த நேரத்திலும் அந்த பதிவுத் தனியே கிடைக்கக் கூடியாதாக இருத்தல் வேண்டும்.

7. ஒரு கணக்கில் நிகழும் பெருந் தொகைகளை உள்ளடக்கிய பரிவர்த்தனைகள், கறுப்புப் பணப் பரிமாற்றம் நிகழ்வதை வெளிப்படுத்தாத வண்ணம் இடம் பெறலாம். வங்கியாளர்கள் கூர்ந்த கவனம் மற்றும் செயல்பாடுகளால் மட்டுமே இவற்றை கண்டறிய முடியும். பரிவர்த்தனைகளின் அளவு, கால இடைவெளி, நிதியாதாரம் (Size, Frequency, Source) போன்றவை ஆழ்ந்து ஆய்வு செய்யப்படுவதுடன், வாடிக்கையாளர் உடனான தொடர்பு மற்றும் அனுபவங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**கணக்கின் வரவுகளைக் கண்காணித்தல் (Monitoring of Remittances)**

ஒரு கணக்கின் உள்ளே கொணரப்படும் வரவுகள் (Remittances) அந்த வாடிக்கையாளரின் உண்மைத் தன்மையை நமக்கு உணர்த்தி விடும். எந்த வகை வரவுகள் கூர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்பதைக் காணலாம்.

1. **மிகப் பெரிய அளவிலான தொகை மாறுதல்கள் (Large Value Transfers)**

சிறு சிறு தொகைகளாக கணக்கினுள் வரவுகள் வந்து சேர்ந்த பிறகு, கணக்கில் குறைந்தபட்சத் தொகையை மீதம் வைத்துவிட்டு, ஒட்டுமொத்தமாக பெருந் தொகையை வேறு கணக்கிற்கு மாற்றுவது போன்ற பரிவர்த்தனைகளால் ஆபத்தானவைகள் இடம் பெறலாம். வாடிக்கையாளரின் நடவடிக்கைகளுக்கோ, வணிகத்திற்கோ பொருத்தமில்லத வகையில் இடம் பெறும் அத்தகைய பரிவர்த்தனைகள் விழிப்புடன் கண்டறியப்பட வேண்டும். அதேபோல், வங்கிக் காசோலைகள், வரைவோலைகள், இதர வழிகளிலான நிதி மாற்றங்கள் (Pos /DDs /TTs /MTs/RTGS/NEFT, etc.) வாயிலாக பெரிய அளவிலான தொகைகள் கணக்கினுள் செலுத்தப்படும் போதும் கூர்ந்த கவனம் தேவை. புதிய கணக்கு ஒன்று துவங்கப்பட்ட சில நாட்களிலேயே இத்தகைய பரிவர்த்தனைகள் நிகழ்ந்தால், அவை வாடிக்கையாளருடைய

தொழில் மற்றும் இதர நடவடிக்கைகாளோடு நேர்மையாகப் பொருந்துகின்றனவா என உறுதி செய்யப்பட வேண்டும்.

ஒரு கணக்கில் நிகழும் பல்வேறு பணப்பரிவர்த்தனைகளைக் கண்காணிக்கும் வழிமுறைகள் மற்றும் விதிமுறைகளைப் பற்றி காணத் துவங்கியுள்ளோம். இனி அதன் தொடர்ச்சியாக ‘‘அயல் நாட்டுப் பண உள்வரவுகள் மற்றும்

வெளி செலுத்தும் தொகைகள் (Foreign Inward and Outward Remittances)’’ மற்றும் அயல் நாடு வாழ் இந்தியர்களின் கணக்குகள் (NRI Accounts) ஆகியவற்றை கண்காணிக்கும் வழிமுறைகள் மற்றும் விதிமுறைகள் பற்றி இனி காணலாம்.

## 2. அயல் நாட்டு உள் வரவுகள் மற்றும் வெளி செலுத்தும் தொகைகள் (Foreign Inward and Outward Remittances)

ஒரு கணக்கினுள் அயல் நாட்டில் இருந்து 10 இலட்சத்திற்கும் மேலாக பணம் செலுத்தப்படும் போது, அதற்குரிய ஆவணங்கள் மிகுந்த எச்சரிக்கை யுடன் சரிபார்க்கப்பட வேண்டும். அதே போன்று அயல் நாட்டிற்கு பணம் செலுத்தப்படும் போது, படிவம் A2 கூர்ந்து ஆய்வு செய்யப் படுவதுடன், சம்மந்தப் பட்ட அனைத்து ஆவணங்களும் சரிபார்க்கப்பட வேண்டும். நடைமுறையில், அயல் நாடு தொடர்பான அனைத்து பரிவர்த்தனைகளிலும் எச்சரிக்கையுடன் செயல்படுவதே பாதுகாப் பானதாகும்.

## 3. அயல் நாடு வாழ் இந்தியர்களின் கணக்குகள் (NRI Accounts)

அயல் நாடு வாழ் இந்தியர்களுக்கு கணக்குகள் துவங்கவும், அவற்றை இயக்குவதற்கும் வங்கிகள் முறையான வழிமுறைகளை வகுத்து வைத்திருக்கின்றன. அயல் நாடு வாழ் இந்தியர்கள் வங்கியின் மதிப்பு மிக்க வாடிக்கையாளர்கள் ஆவர். அயல் நாடுகளுக்குச் சென்று கடின உழைப்பால்

தங்கள் குடும்பத்தினருக்காக ஈட்டுகிற பணத்தை நம் நாட்டு வங்கிகளில் செலுத்தி சேமிக்கிறவர்கள் அவர்கள்.

KYC வழிகாட்டுதல்களின்படி, அவர்கள் நடுத்தர மற்றும் அதிக இடர் (Medium to High Risk) கொண்ட வாடிக்கையாளர்களாகக் கருதப் படுகிறார்கள். இவர்கள், நாட்டின் எல்லைகளைக் கடந்து நிகழ்த்துகிற பணப் பரிமாற்றங்கள் வாயிலாகத் தீவிரவாதச் செயல்களுக்குப் பெருந்தொகைகளை வழங்கவும், குற்றப் பின்னணி கொண்ட கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கவும் வாய்ப்பு உள்ளது. எனவே, இவர்களுக்குக் கணக்குத் தொடங்கும்போது முலுஊ விதிமுறைகளை மிகுந்த கவனத்துடன் பின்பற்ற வேண்டும். வங்கி வணிகத்திற்கு நல்ல பங்களிப்பைத் தரும் இத்தகைய வாடிக்கையாளர்களை இழந்தும் விடாமல், அதே நேரத்தில் KYC விதிமுறைகளையும் முறையாகக் கடைபிடித்து, இத்தகைய கணக்குகளை கவனத்துடன் கையாள வேண்டும்.

## 4. NRI கணக்குகளைக் கையாளுதல் மற்றும் கண்காணித்தல்

- NRI கணக்குகளைக் கையாளும் வங்கியாளர்கள், ரிசர்வ் வங்கியின் ‘‘பண மாற்றக் கட்டுப்பாடு கையேடு’’ தனை (Exchange Control Manual) நன்கு படித்து, கணக்குகளைத் தொடங்குவது மற்றும் இயக்குவது தொடர்பான தெள்ளிய அறிவுடன் விளங்க வேண்டும்.

- கணக்கு தொடங்கும் போது, முறையான KYC விதிகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.

- கணக்கு தொடங்க வரும் வாடிக்கையாளர், ரிசர்வ் வங்கி அவ்வப்போது வெளியிடும் ‘‘நாட்டின் சட்ட விதி மீறல் செய்தவர்கள் பட்டியல் மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்புகள் பட்டியலில்’’ இடம் பெறாதவரா எப்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- வெளி நாட்டில் இருந்த வண்ணம் இங்கே கணக்கு தொடங்கப்படும் போது மிகுந்த எச்சரிக்கை அவசியம். அந்தப் பகுதியில் உள்ள வங்கிக்குத் தொடர்பான அலுவலகம் வாயிலாக முலுஊ வழிமுறைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். கடவுச் சீட்டு (Passport), நுழைவிசைவு (ஏளைய), சமூகப் பாதுகாப்பு எண் (Social Security Number), வேலை வாய்ப்பு ஆவணங்கள் போன்றவற்றின் நகல்கள் முறைப்படி உறுதி செய்யப்பட வேண்டும்.

- அயல் நாட்டு வாடிக்கையாளரால் நேரடியாக உரிய ஆவணங்களுடன் செலுத்தப்பட்டால் ஒழிய, வெளி நாட்டு பணத் தாள்களை மற்றவர்கள் வாயிலாக வங்கி ஏற்கக் கூடாது. வெளி நாட்டு பணத் தாள்கள், அனுமதிக்கப்பட்ட விளிம்புகளுக்கு மேல் அதிக அளவில் நாட்டிற்குள் கொண்டுவரப்படும் போது, சுங்கத் துறை (Customs Authority) பணத்தாள் சான்றுப் படிவத்தில் (Currency Declaration Form) பதிவு செய்து உரிய சான்றினை அளிக்கும். அவ்வாறு அனுமதிக்கப்படும் பணத் தாள்கள் உரிய சான்று ஆவணங்களோடு ஏற்கப் படலாம்.

- கிளையில் பணியாற்றும் வங்கியாளர்கள், அயல் நாட்டு வாடிக்கையாளர் இந்தியாவிற்கு வரும்போது அவரை கிளைக்கு வரவழைத்து அவரோடு உரையாட வேண்டும். இது, சிறந்த வாடிக்கையாளர் உறவை ஏற்படுத்திக் கொள்ளவும், அதன் வாயிலாக வங்கியின் வணிகத்திற்கு அவரை உகந்த வகையில் பயன் படுத்திக் கொள்ளவும், வங்கி ஆவணங்களில் உள்ள அவரைப் பற்றிய தகவல்களை உறுதி செய்தி கொள்ளவும் உதவும்.

NRI கணக்குகளில் வாடிக்கையாளர் மற்றும் மூன்றாம் நபர்களுக்கு காசோலைகள் வாயிலாகவே பணம் வழங்கப்படும் போது, அந்த பரிவர்த்தனைதொடர்பான தகவல்கள் நாசூக்கான முறையில் அறியப்பட வேண்டும். குறிப்பாக, அதிக அளவிலான தொகைகள் அடிக்கடி பரிவர்த்தனை செய்யப்படும் போது மிகுந்த கவனம் தேவை.

## சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனைகள் (Suspisious Transactions)

ஒரு சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனை என்பது, முன்னரே நிகழ்ந்துவிட்ட ‘‘கறுப்புப் பணச் சலவை’’யாகவோ அல்லது இனி நிகழ இருக்கிறது என்கிற அச்சுறுத்தலைத் தருவதாகவோ இருக்கலாம் என்பதே பரவலாக சொல்லப் படுகிற சொற் பொருள் விளக்கம்.

முன்னரே நிகழ்ந்துவிட்ட ‘‘கறுப்புப் பணச் சலவை’’யாக இருக்கலாம் என்கிற சந்தேகம் ஏற்படுகிற பட்சத்தில், அது தொடர்பான முறையான விசாரனைகளும் ஆய்வுகளும் நிச்சயமாக நடத்தப்பட வேண்டும்.
விசாரனைக்குப் பிறகு, அந்த பரிவர்த்தனை நேர்மையான ஒன்றுதான் என்று கூட நிரூபிக்கப் படலாம். ஆதற்காக அதன் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை மற்றும் ஆய்வுகள் நிறுத்தப்படக் கூடாது.

ஒரு வேளை அது சட்டத்திற்குப் புறம்பான பரிவர்த்தனைதான் என அடையாளம் காணப்பட்டால், உடனடியாக அனைத்து அடுத்த கட்ட எச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

அந்தப் பரிவர்த்தனையின் அடிப்படை ஆராயப்பட வேண்டும்.அந்தப் பரிவர்த்தனையின் தொகை எங்கிருந்து, யாரிடமிருந்து வருகிறது அல்லது இங்கிருந்து யாருக்குச் செல்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட வேண்டும். அத்தகைய சட்ட விரோதமான பரிவர்த்தனைகள் உடனடியாக தடுக்கப் படுவதுடன் அது சம்மந்தப் பட்டவர்கள் அறியாத வண்ணம் அவர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இவைதான் சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனைகள் என்று குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு ‘‘முழுமையான பட்டியல்’’ எதுவும் கிடையாது. ஏனெனில்,

“மானுட முறைகேடு” என்பது அளவிட முடியாதது. குற்றங்கள் புரிபவர்கள் அதிபுத்திசாலிகள். அதனால், நாளுக்கு நாள் புதுப் புது யுக்திகள் கையாளப் படுகின்றன. இருந்தாலும், இதுவரை வங்கியாளர்களால் அனுபவப்பூர்வமாக உணரப்பட்ட சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## அடையாளம் காண உதவும் அறிகுறிகள் (Identification Parameters)

### அ. வாடிக்கையாளர்களின் வழக்கமான வணிகத்துடன் ஒத்துப்போகாத பரிவர்த்தனைகள்

- நிறுவன கணக்குகளில் அடுத்தடுத்து அதிகமான எண்ணிக்கையில் நிகழும் பரிவர்த்தனைகள். அதிகமான அளவில் பணம் செலுத்தல் மற்றும் எடுத்தல்.

- நிறுவன கணக்குகளில் பல்வேறு வழிமுறைகளில் தொகை உள்வருதல் மற்றும் வெளிச்செல்லுதல். கணக்கின் தன்மைக்கு சற்றும் தொடர்பில்லாத, வெளிப்படையாகத் தெரிகிற பரிவர்த்தனைகள்.

- நேரடி பணத்தொகை (Hot Cash) செலுத்தி கோரப்படும் கேட்பு வரைவோலைகள் (DD/TT/PO) மற்றும் வேற்றுக் கணக்குகளுக்கு பணமாற்றம் செய்ய முயலுதல்.

- கணக்கின் வணிகத் தன்மைக்கும், இயல்புக்கும் பொருந்தாத வகையில், கேட்பு வரைவோலைகள் மற்றும் பணமாற்றங்கள் வாயிலாக பெரிய அளவில் பணத்தொகை வரவு வைக்கப்படுதல்.

- நேரடி பணத்தொகையாக பெரிய தொகை பணத்தாள்களுடன் (Higher Denomination Notes) பெருந்தொகை ஒரே முறையில் (Single Cash Deposit) செலுத்தப் படுதல்.

- சிறுசிறு தொகைகளாக அதிக அளவில் காசோலைகள் கணக்கினுள் செலுத்தப்படுதல். ஆனால் அதற்கேற்ப தினசரி செயல்பாடுகளுக்கு ஏற்ப பணம் எடுக்கப்படாமல் இருத்தல்.

- ரிசர்வ் வங்கிக்கு அளிக்கப்பட வேண்டிய பணப் பரிவர்த்தனை அறிக்கை (Cash Transaction Report - CTR) மற்றும் சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனை அறிக்கை (Suspicious Transaction Report - STR) போன்றவற்றில் சிக்கிவிடாமல் தவிர்க்க, அதிக அளவில் சிறுசிறு தொகைகளாக பணம் செலுத்துதல் மற்றும் எடுத்தல். இதனை ஆங்கிலத்தில் 'Structuring' என்று சொல்வார்கள்.

- இத்தகைய அறிகுறிகளை வங்கியாளர்கள் கூர்ந்து கவனிப்பதுடன் அவற்றுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதில் அலட்சியமோ கவனக் குறைவோ இன்றி செயல்பட வேண்டும். தவறினால் பேராபத்துகள் நிகழ வாய்ப்பிருக்கிறது.

## ஆ. வாடிக்கையாளர் பற்றிய முழுமையற்ற மற்றும் மறைக்கப்பட்ட விவரங்கள் (Incomplete/Non - Disclosure of Data by Customer)

- வாடிக்கையாளர் சட்டம் மற்றும் வங்கி விதிமுறைகளுக்கு உட்பட்டு தன்னைப் பற்றிய விவரங்களைத் தரத் தயக்கம் காட்டுதல்

- ரிசர்வ் வங்கிக்கு சட்டப்பூர்வமாக தெரிவிக்கப்பட வேண்டிய போது அவர் அதனை மேற்கொண்டு தொடராமல் நிராகரித்தல்

- சட்டப்படி அறிக்கை தரப்பட வேண்டிய பரிவர்த்தனையை அங்ஙனம் செய்துவிடாமல் வங்கிப் பணியாளரை வசப்படுத்தவோ அல்லது கட்டாயப்படுத்தவோ முயற்சி செய்தல்

- வாடிக்கையாளர் பற்றிய நிதி சார்ந்த தகவல்கள் சட்டப்படி தேவைப்படும் போது அவற்றைத் தெரிவிக்க மறுத்தல்

- ஒரு வாடிக்கையாளர் அல்லது நிறுவனம் தங்கள் வணிகத்தின் தன்மை, முந்தைய வங்கித் தொடர்புகள், வணிகம் நடக்கும் பகுதி போன்றவை பற்றிய முழுமையான தகவல்களைக் கொடுக்க தயக்கம் காட்டுதல். (இத்தகைய கணக்குகளைத் தொடங்காமல் தவிர்ப்பதே நல்லது)

- ஒரு வாடிக்கையாளர் அல்லது நிறுவனம் தங்களுடைய செயல்பாடுகள் மற்றும் நிதி சார்ந்த விவரங்களைத் தெரிவிக்கத் தயங்குதல்
- ஒரு வாடிக்கையாளர் தனது முந்தைய / தற்போதைய தொழில் / வேலைவாய்ப்பு பற்றி எந்த ஆவணமும் இல்லாமல் அல்லது சமர்ப்பிக்காமல் இருந்துகொண்டு மிகப் பெரிய தொகைகளைக் கொண்ட பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுதல். அவரது தொழில் / வேலைவாய்ப்புப் பற்றி விவரங்கள் கேட்கப்படும் போது அவற்றைக் கூறத் தயங்குதல் அல்லது மறுத்தல்.

இவை போன்ற பல்வேறு அறிகுறிகள் வாயிலாகச் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கணக்குகளை அடையாளம் காணலாம்.

பொதுவாக, ஒவ்வொரு வாடிக்கையாளரின் கணக்கிலும் வழக்கமாக நிகழும் பரிவர்த்தனைகளின் தன்மை வங்கியாளருக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளர் ஒரு குறிப்பிட்ட வகையான தன்மைகள் கொண்ட பரிவர்த்தனை களையே தொடர்ந்து மேற்கொண்டு வருவார். திடீரென்று அவரது பரிவர்த்தனைகளில்

மாற்றங்கள் தெரியத் தொடங்கும். அந்தத் தருணத்தில் வங்கியாளர் எச்சரிக்கை அடைய வேண்டும். அத்தகைய திடீர் மாற்றங்கள் எவையெவை ? அவற்றின் அறிகுறிகள் என்ன ? அகியவற்றை இனி காணலாம்.

**இ. வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகள்**

- வாடிக்கையாளர் பற்றிய விவரங்கள் மற்றும் பரிவர்த்தனைகள் பற்றி வங்கியின் வசம் உள்ள சுயவிவரக் குறிப்புகளோடு (Customer / Transaction Profile) ஒத்துப்போகாத வகையில், அவரது பரிவர்த்தனைகளின் பண அளவு, எண்ணிக்கை, நிகழ்வு இடைவெளி போன்றவை இடம் பெறுதல்

- பெருந்தொகை வரும் / செல்லும் இடங்கள் மற்றும் பயனாளிகள் பற்றி அறிந்துகொள்ள இயலாத வகையில், வங்கியாளர்களைக் குழப்பும் விதமாக செய்யப்படும் பரிவர்த்தனைகள்

- கறுப்புப் பண பரிமாற்றம் செய்யும் நாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ள நாடுகளில் இருந்து கணக்கினுள் வரும் பணம்

- ஒரு வாடிக்கையாளர் தன் வசிப்பிடம் அல்லது அலுவலகத்திலிருந்து வெகு தூரத்தில் உள்ள வங்கிக் கிளையில், நம்பும் வகையில் போலியான காரணங்களுடன் கணக்கு துவங்குதல்

- வெவ்வேறு வங்கிச் சிட்டைகளை (டுயநெடள) கொண்ட பணக் கட்டுகளுடன் பெருந்தொகைகளை அடிக்கடி கணக்கில் செலுத்துதல்

- தொடர்ந்த வேலை வாய்ப்போ அல்லது வருமானமோ இல்லாத வாடிக்கையாளர் கணக்கில் அடிக்கடி பணம் செலுத்துதல்

- அடிக்கடி தனது பாதுகாப்பு பெட்டகத்தை இயக்கிவிட்டு உடனே கணக்கில் பணம் செலுத்தும் வாடிக்கையாளர். அதிலும் குறிப்பாக உச்ச வரம்புக்குட்பட்ட தொகைகளாக அவ்வாறு செலுத்தும் வாடிக்கையாளர்.

- பல்வேறு கணக்குகளை ஒருவரே நிர்வகித்து கொண்டு அவற்றுக்கிடையே பண மாற்றங்கள் செய்து, ஏதேனும் ஒரு கணக்கை முதன்மை கணக்காக வைத்து கொண்டு பெருந்தொகைகளை வெளியே பண மாற்றம் செய்தல்.

- உச்ச வரம்புகுட்பட்ட தொகைகாளாக பல்வேறு கணக்குகளில் பணம் செலுத்திவிட்டு பின்னர் அவற்றை ஒரு முதன்மை கணக்கில் ஒன்று திரட்டி, வெளி இடங்கள் அல்லது அயல் நாடுகளுக்கு இணையதள வங்கிச் சேவை உட்பட்ட பல்வேறு வழிகளில் பண மாற்றம் செய்யும் ஒரு வாடிக்கையாளர்.

- போன்ற வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகளை வங்கியாளர்கள் உன்னிப்பாக கவனிக்கவேண்டும்.

**ஈ. சந்தேகத்திற்குரிய பணப் பரிமாற்ற நடவடிக்கைகள்**

- அடிக்கடி பெருந்தொகைகளாக பணம் பெறுதல் மற்றும் செலுத்துதல் போன்ற அயல் நாட்டு பணப் பரிவர்த்தனைகள்.

- துரித பணப் பரிமாற்ற முறைகள் மற்றும் கேட்பு வரைவோலைகள் வாயிலாக பல்வேறு பகுதிகளிலிருந்து ஒரு கணக்கில் தொகைகள் செலுத்தப்பட்டு, அதே நாளில் கணக்கில் குறைந்தபட்ச இருப்புத் தொகையை மட்டும்

வைத்துவிட்டு, மீதமுள்ள மொத்தத் தொகையையும் வேறுபகுதியிலுள்ள கணக்கிற்கு மாற்றம் செய்தல்.

ஒரு வாடிக்கையாளர் அவராகவோ அல்லது மற்றவர்களுக்கு ஒரு கருவியாகவோ இருந்து, அவரது வணிகம் மற்றும் வருமானத்திற்கு பொருந்தாத வகையில், அதிகமான எண்ணிக்கையில் பெருந்தொகைகளை உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து பணப் பரிமாற்றம் முறைகளில் பெறுதல் அல்லது செலுத்துதல்.

வழக்கத்திற்கு மாறான வகையில், ஒரு வாடிக்கையாளர் அதிக அளவில் பணக் கட்டுகளாக பரிவர்த்தனைகள் மேற்கொள்ளுதல். அதிக அளவில் பங்குசந்தை, தங்கம், சொத்து வணிகம் (Real Estate) போன்றவற்றில் முதலீடு செய்தல்.

இத்தகைய பரிவர்த்தனைகள் இறுதியில் அந்தப் பணம் எங்கிருந்து வந்தது, எப்படி வந்தது, எவ்வளவு தொகை போன்ற மூல ஆதாரங்களை அளித்துவிடக் கூடிய ஏமாற்று வித்தைகள் ஆகும்.

- அயல் நாடுகளில் உள்ள வணிகம் மற்றும் சேவை நிறுவனங்களிலிருந்து பணம் பெறுதல் அல்லது செலுத்துதல்.

- கேட்பு வரைவோலை அல்லது காசோலை வாயிலாக இருந்து வெளிநாட்டிற்கு பணப் பரிமாற்றம் செய்யும்போது, அந்த தொகையை அந்த நாட்டின் பணமாக மாற்றாமல் இந்தியப் பணமாகவே அனுப்புதல். இதன் வாயிலாக அந்த நாட்டில் இந்த வரைவோலை அல்லது காசோலைக்குரிய மதிப்புத் தொகை கறுப்புப் பணத்தால் கொடுக்கப்பட்டு, இந்த வரைவோலை அல்லது காசோலை வசூலுக்குப் பின்னர் கறுப்புப் பணம் வெள்ளையாவதற்கு வாய்ப்புள்ளது.

- வெளியிலிருந்து பணப் பரிமாற்றங்கள் வாயிலாக கணக்கில் தொகை பெறப்பட்டு, உடனே அந்த தொகையைக் கொண்டு மூன்றாவது நபர்கள்

பெயரில் பங்குசந்தையிலிருந்து பங்குகள் மற்றும் நிதிசார் பத்திரங்கள் வாங்குதல். இதன் வாயிலாக கறுப்புப் பணம் வெள்ளையாக மாற வாய்ப்புள்ளது.

- வெவ்வேறு வங்கிகளிலிருந்து பணம் எடுத்து ஒரு வங்கியில் பெருந்தொகையாக வைப்பு நிதிக்காக பணம் செலுத்துதல்.
- கடத்தல் தொழில், போதைப் பொருட்கள் கடத்துதல் மற்றும் வரிவிலக்கு அல்லது ஏய்ப்புக்கு வாய்ப்புள்ள நாடுகளில் இருந்துகணக்கிற்கு பண மாற்றம் வாயிலாக பணம் பெறுதல் அல்லது செலுத்தப்படுதல்.
- கடன்கள் பெறப்பட்டு அத்தகைய நாடுகளுக்குப் பண மாற்றம் செய்யப்படுதல்.

இவை தவிர புதுப்புது யுக்திகள் நாளுக்கு நாள் உதயமாகிக்கொண்டே போகலாம். மேலும் சில வங்கி ஊழியர்கள் கூட இத்தகைய மோசடிகளுக்கு உடந்தையாகச் செயல்பட வாய்ப்புள்ளது. இதனையும் வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அவர்களை அடையாளம் காணுவதற்கான அறிகுறிகள் கீழே தரப்பட்டுள்ளன.

- வருமானத்திற்கும் அப்பாற்பட்ட ஆடம்பரமான வாழ்க்கை
- எந்த வகையான விடுப்புகளும் எடுக்காமல் தவிர்த்தல். விடுப்பே எடுக்காமல் பணியாற்றும் உண்மையான ஊழியர்களுக்கு ஊடே இத்தகைய மோசடிக்காரர்களும் கலந்திருக்கக் கூடும்.
- வங்கியின் விதிமுறைகளைக் கடைபிடிக்காமல் தொடர்ந்து அலட்சியம் காட்டுதல்.
- வாடிக்கையாளர்களின் சார்பாக அடிக்கடி வங்கியில் பணம் செலுத்துதல்.

இத்தகைய நடவடிக்கைகளுடன் மோசடிகளுக்குத் துணை போகும் வங்கி ஊழியர்கள் அடையாளம் காணப்பட்டு தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு அமெரிக்க நாட்டில் நிதி நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் ஆண்டுதோறும் குறிப்பிட்ட காலம் கட்டாய விடுப்பில் செல்ல வேண்டும் என்கிற முறை வழக்கத்தில் உள்ளது.

வங்கி நிர்வாகம், ஊழியர்களின் திறன் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு கருதி நன்கு திட்டமிடப்பட்ட பணிச் சுழற்சி மற்றும் பணியிட மாற்றங்களை (Job rotation and Transfers) வாடிக்கையாளர் சேவை பாதிக்கப்படாத வகையில் செயல்படுத்த வேண்டும்.

வங்கி எடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் செயல்முறைகள் குறித்து வாடிக்கையாளர்களிடம் கலந்துரையாடக் கூடாது.

மோசடிகள் குறித்த இரகசிய உள்ளகச் சுற்றறிக்கைகள் (Internal Confidentialo Circulars) மிகவும் இரகசியமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இவை குறித்த விவரங்களை ஊழியர்கள் வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்தக் கூடாது.

## பயங்கரவாத நிதி தடுப்பு நடவடிக்கைகள் (Anti - Terrorism Finance)

இந்திய ரிசர்வ் வங்கி, தடை செய்யப்பட்ட மற்றும் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலை அவ்வப்போது சுற்றறிக்கைகள் வாயிலாக தெரிவித்துக் கொண்டே உள்ளது. இதன் நோக்கம், ஒவ்வொரு வங்கியிலும் உள்ள மொத்த கணக்குகளில் அந்தப் பட்டியலில் உள்ள பெயர்களில் கணக்குகள் உள்ளனவா என்பதனைக் கண்டறிந்து அவற்றை முடக்குவதுடன், ரிசர்வ்வங்கி மற்றும் மத்திய அரசுக்கு அத்தகைய கணக்குகள் பற்றிய தகவல்களை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் என்பதே ஆகும்.

எனவே, இத்தகைய சுற்றறிக்கைகளை அலட்சியப்படுத்தாமல், முதன்மை முக்கியத்துவம் கொடுத்து, வங்கிகள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அத்தகைய நடவடிக்கைகள் எப்படி அமைய வேண்டும் என்பதனை இனி காண்போம்.

இந்தப் பட்டியல் உடனுக்குடன் கணினியில் பதிவு செய்யப்பட வேண்டும். புதிய கணக்குகள் துவங்கும் போது, கணினியில் இந்தத் தொகுப்பை எளிதாகப் பார்த்து, கணக்கு துவங்க வரும் அமைப்பின் பெயர் அந்தப் பட்டியலில் உள்ளதா என்பதனை உறிதி செய்துகொள்ள வேண்டும். அதே போன்று பரிவர்த்தனைகள் நிகழும் போது, பணம் செலுத்தும் அல்லது பெறும் அமைப்பின் பெயர் அந்தப் பட்டியலில் உள்ளதா என்பதையும் பார்த்துக்கொள்ள வேண்டும். இது போன்ற பரிவர்த்தனைகளை அடையாளம் காட்டி வழிகாட்டும் விதத்தில் பொருத்தமான நுணுக்கங்கள் கணினியில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

வருமான வரி, சுங்க வரி மற்றும் அன்னியச் செலவாணி ஒழுங்குமுறைச் சட்டம் ஆகியவற்றை மீறிய தனிமனிதர்கள் மற்றும் அமைப்புகள், மேலும் அவ்வாறு மீறியவர்களின் முடித்துவிடப்பட்ட கணக்குகள் ஆகியவற்றின் பட்டியலையும் கணினியில் எளிதாகப் பார்க்கும் வகையில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

அயல் நாடுகளில் இருந்து நிதி பெறும் நிறுவனங்கள் வங்கியில் கணக்கு துவங்கும் போது, அந்த நிறுவனம் மத்திய அரசின் அயல் நாட்டு பங்களிப்பு ஒழுங்குமுரைச் சட்டத்தின்படி (Foreign Contributions regulations Act, 1976) பதிவு செய்யப்பட்டுள்ளதா என உறுதி செய்துகொள்ள வேண்டும். கணக்கு துவங்கப்படும் போது பெறப்படும் இதர ஆவணங்களுடன் மேற்கண்டவாறு பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிதழின் நகல் பெறப்பட வேண்டும். சில நிறுவனங்கள் இடையில் புதிதாக வெளிநாடுகளில் இருந்து நிதி வசூலிக்கும் போதும் மேற்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். இது பற்றிய குறிப்பு கணக்கின் பேரேட்டில்பதிவு செய்யப்பட வேண்டும்.

